**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண். 29/2025**

முருகேசன் (குடும்ப மேலாளர்), த/பெ.முத்துகருப்பன், வயது சுமார் 34, வசிப்பிடம்– சத்தியமங்கலம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம். ..... வாதி

//எதிர்//

1. மீனாட்சி, க/பெ.வைரபெருமாள், வயது சுமார் 80, வசிப்பிடம் – சத்தியமங்கலம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.
2. சரோஜா, க/பெ.மாரியப்பன், வயது சுமார் 50, வசிப்பிடம் – சத்தியமங்கலம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.
3. மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் மாவட்டம்
4. மாவட்ட பதிவாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், கரூர் மாவட்டம்
5. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.
6. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்
7. கிராம நிர்வாக அலுவலர், சத்தியமங்கலம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் ...... பிரதிவாதிகள்

பிரதிவாதியோ, அவரது ஆட்களோ வாதி தாவா மெத்தை வீட்டை பொறுத்து விற்கிரயம், வில்லங்கம் மற்றும் பத்திர பதிவு ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்த தேதி – 06.02.2025

வழக்குமூலம் – 31.01.2025, 04.02.2025 இடம். சத்தியமங்கலம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்ற இடத்தில் எழுந்துள்ளது.

<u>தாவாவிற்கான மதிப்பு</u>

| | |
|---|---|
| தாவா நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மதிப்பு | - 1000.00 |
| வாதியின் உத்தேச மதிப்பு த.நீ.ச 27C ன் படி வாதி செலுத்திய நீதிமன்ற கட்டணம் | - 30.00 |

இவ்வழக்கு என் முன்பாக 12.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாதரப்பினராகவும்,

3 முதல் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அசல் வழக்கை நீதிமன்றத்திற்கு வெளியே முடித்துக் கொள்வதாக வாதி தரப்பில் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்ததால், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்பாணை**

அசல் வழக்கை நீதிமன்றத்திற்கு வெளியே முடித்துக் கொள்வதாக வாதி தரப்பில் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்து, குறிப்பாணை பதிவு செய்யப்பட்டு, அசல் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

**தாவா சொத்து விபரம்**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், சத்தியமங்கலம் கிராமம் பட்டா எண் 655க்கு சர்வே எண் 142/14Bல் 43.50 ஏர்ஸ் நிலம், சர்வே எண்.178/17ல் 9.00 ஏர்ஸ் நிலம் மற்றும் சர்வே எண்.178/2Bல் 14.50 ஏர்ஸ் நிலம் மற்றும் சர்வே எண்.174/Bல் 1750 சதுர அடி நிலத்தில் உள்ள மெத்தை வீடு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு சகிதம். மேற்படி சொத்து சத்தியமங்கலம் ஊராட்சி எல்லைக்கு உட்பட்டதாகும்,

| வ.எண் | செலவுத் தொகை விபரம் | வாதி | பிரதிவாதி |
|---|---|---|---|
| | | ரூ | ரூ |
| 1 | நீதிமன்றக் கட்டணம் | **செலவுத்தொகை இல்லை** | |
| 2 | வழக்குரை தயாரிக்க | | |
| 3 | வக்காலத்து | | |
| 4 | படிச் செலவு | | |
| 5 | வழக்கறிஞர் கட்டணம் | | |
| | மொத்தம் | – | – |

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

Sd/–R. தமிழரசி

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை.**

****************************************

**PDM, Kulithalai**
**O.S.No.29/2025**
**DECREE**
**D.D.12.03.2026**

****************************************